### கழகத் தளகர்த்தர் எல்.கணேசன் மறைவு:

# என் உள்ளம் வேதனையால் துடிக்கிறது!

## முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!

**சென்னை, ஜன. 5-**

**“கழகத் தளகர்த்தர் எல்.கணேசன் அவர்கள் மறைவால் என் உள்ளம் வேதனையால் துடிக்கிறது” என்று அன்னாரின் மறைவு குறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**



முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி மொழிப்போர்க் களத்தில், இந்திமொழியின் ஆதிக்கத்திற்கு எதிராகப் புறப்பட்ட மாணவர் படையின் தளகர்த்தர்களில் ஒருவரும் கழக உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினருமான எல்.கணேசன் அவர்கள் மறைந்த செய்தியால் பெரிதும் துயருற்றேன்.

சட்டமன்றம் சட்டமேலவை நாடாளுமன்றம் என முழங்கிய அவரை இனி நாம் காண முடியாது என்பதை எண்ணும்போதே உள்ளம் வேதனையால் துடிக்கிறது. தலைவர் கலைஞர் அவர்களின் பாசத்தைப் பெற்ற ‘எல்.ஜி.’ அவர்கள், 1989இல் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, அவரது பாராளு மன்றச் செயலாளராகவும் இருந்தார்.

நான் தஞ்சை மாவட்டத்திற்குச் செல்லும்போதெல்லாம் தவறாது அவரது இல்லத்திற்குச் செல்வேன்; அவரும் புன்சிரிப்புடன் வரவேற்று, நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் மக்களிடம் பெற்றுள்ள வரவேற்பு குறித்து மகிழ்ச்சி பொங்கப் பெருமை யோடு சொல்வார்.

திராவிட இயக்கக் கொள்கைகள் மீது பற்றுகொண்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்று அரசியல் களத்தில் பணியாற்றிய அவர் என்றும் நம் நெஞ்சங்களில் நிறைந்திருப்பார். அவரது பிரிவால் வாடும் கழக உடன்பிறப்புகள், குடும்பத்தினர், நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# ஒரத்தநாட்டில் பிறந்த உரத்த குரல்!

திராவிடப் பேரியக்கத்தின்
முன்னோடிகளுள் ஒருவர்
எல்.கணேசன்

இன்று மறைந்துற்றாராமே!

ஒரத்தநாட்டில் பிறந்த
உரத்த குரல்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில்
மாணவர்களைக் களப்படுத்திய
தமிழ்நாட்டுத் தளபதி

நாடாளுமன்றத்தில்
ஆங்கிலப் புயலாய்ப் பேசுவார்;
தமிழ்நாட்டில்
தமிழ்த் தென்றலாய் வீசுவார்

வெற்றிலை போட்டுச்
சிவந்த வாயும்



சிவப்புத் துண்டும்
அவர் அடையாளங்கள்


மொழிப்போர் என்ற வரலாறு
இருக்கும் வரைக்கும்
எல்.கணேசனுக்கு
ஓர் அத்தியாயம் இருக்கும்

இந்தியை எதிர்த்தவர்
இன்று உயிரோடில்லை;

இந்திஎதிர்ப்பு உயிரோடிருக்கிறதா
என்பதே கேள்வி?

அவரை இழந்துவாடும்
குடும்பத்தார்க்கும்
இயக்கத்தார்க்கும்
ஆழ்ந்த இரங்கல்

மொழி வணக்கம் செய்தவருக்கு
என் புகழ் வணக்கம்



**கவிப்பேரரசு வைரமுத்து**

### மொழிப்போர்த் தளபதி –

# கழகத் தளகர்த்தர் எல்.கணேசன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி! அமைச்சர்கள் – கழக முன்னணியினர் அஞ்சலி!

**தஞ்சாவூர் ஜன.5-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர்களில் ஒருவரான கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், மொழிப்போர்த் தியாகியுமான எல்.கணேசன் (வயது 92) அவர்கள் நேற்று (04.01.2026 ஞாயிறு) காலை 5.30 மணியளவில் உடல்நலக்குறைவு காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று விரைந்து சென்று மறைந்த எல்.கணேசன் அவர்களின் உடல் மீது மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.**

மறைந்த எல்.கணேசன் அவர்கள் கடந்த 1963 ஆம் ஆண்டு முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முழுவீச்சில் பங்கேற்றவர். 1967, 1971, 1989 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் தி.மு.க. சார்பில் ஒரத்தநாடு தொகுதியில் போட்டியிட்டு வென்றவர். தவிர, 1982 86ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தார். தமிழக சட்ட மேலவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தார்.

**4 அவைகளிலும் பொறுப்பு வகித்தவர்!**

1986ல் சட்ட மேலவைத் தேர்தலில் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுதியிலும், அதிக வாக்கு வித்தியா சத்தில் வென்றவர். இந்திய நாடாளு மன்ற மேலவை மற்றும் தமிழ் நாடு சட்டமன்ற மேலவை,



கீழவை ஆகிய வரலாற்று சிறப்பு மிக்க நான்கு அவைகளிலும் பொறுப்பு வகித்த பெறுமை அவருக்கு உண்டு.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர், கழக அறிவிக்கும் போராட்டம், ஆர்ப்பாட்டம், மாநாடு என எதுவாக இருப்பினும் வயது முதிர்ந்த நிலையிலும் முதல் ஆளாக நிற்பார். கழக தேர்தல் பணிக்குழு தலைவராகவும் சிறப்பாக பணியாற்றியவர்.

மறைந்த எல்.ஜி. அவர்களுக்கு க.கமலா என்ற மனைவியும், தஞ்சை மத்திய மாவட்டக் கழகப் பொருளாளர் எல்.ஜி.அண்ணா, மருத்துவர் குட்டி (எ) எல்.ஜி.கோவிந்தநாதன், ஆகிய இரு மகன்களும், மருத்துவர் எல்.ஜி.மாதவி என்ற மகளும் உள்ளனர்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த அமைச்சர்கள் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு மற்றும் முனைவர் கோவி.செழியன், எஸ்.இரகுபதி, தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தஞ்சை மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

முத்தமிழறிஞர் அவர்களின் செயலாளர் கி.இராஜ மாணிக்கம் (ஐ.ஏ.எஸ்.ஓய்வு) அவர்கள் குடும்பத்தினருடன் சென்று அன்னாரின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (5.1.2026) காலை 09.00 மணியளவில் அவரது இல்லமான தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி சாலை, பாலாஜி நகரில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு ஒரத்தநாடு ஒன்றியம் அவரது சொந்த ஊரான கண்ணந்தங்குடி கீழையூரில் காலை 11.00 மணியளவில் அடக்கம் செய்யப் படுகிறது.

### புதுக்கோட்டை மாவட்ட

# அறங்காவலர் குழுத் தலைவராக இரண்டாவது முறையாக தவ.பாஞ்சாலன் பொறுப்பேற்பு!

## அமைச்சர் எஸ்.ரகுபதி – கே.கே.செல்லப்பாண்டியன் வாழ்த்து!

புதுக்கோட்டை, ஜன. 5-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி முன்னான் ஊராட்சி மன்ற தலைவரும் கறம்பக்குடி திமுக தெற்கு ஒன்றிய கழக செயலாளருமான தவ.பாஞ்சாலன் புதுக்கோட்டையில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக 2 வது முறையாக மீண்டும் பதவி ஏற்று கொண்டார்.

புதுக்கோட்டையில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் அமைச்சர், தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா எம்.எல்.ஏ., எம்.எம். அப்துல்லா, கவிச்சுடர். கவிதைப் பித்தன், மேயர் திலகவதி செந்தில், பரணி கார்த்திகேயன், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ், சுப.சரவணன், சு.சண்முகம் , எம்.எம்.பாலு மற்றும் அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# எல்.ஜி.எனும் லெஃப்டினெண்ட் ஜெனரல்!

**எல்.**ஜி.என எல்லோராலும் அழைக்கப்பட்ட எல்.கணேசன், எங்கள் போராட்டக் களங்களின் லெஃப்டினெண்ட் ஜெனரல். என் போன்றோரின் ஆரம்ப அரசியல் நாட்களின் வசீகர சக்தி! என் மானசீக குரு!

துணிச்சல், வீரம் இவற்றின் ஒட்டு மொத்த உருவம், கேட்போரை கவர்ந்திழுக்கும் கணீரென்ற தனித்தன்மை பொருந்திய வெண்கல குரல், ஆழ்ந்த கற்றறிவு, அருவி போல் ஆங்கில பொழிவு. இவர் பேசும் மேடைகளில் உடன் சென்று பேசுவதில் அளவில்லா பெருமிதம். சட்டமன்ற, நாடாளுமன்ற உரைகளின்போது சண்டமாருதம், இந்தி எதிர்ப்பு போர்க்களத்தின் முன்னணி தளபதியாக அவசரநிலை காலத்தில் “மிசா“ சிறைவாசியாக, 1986 குண்டு வெடிப்பு நிகழ்வில் பொய் குற்றச்சாட்டு போன்ற நேரங்களில் அவர் காட்டிய அபரிமிதமான மன உறுதி, தைரியம் அளவிட முடியாத ஒன்று. கழகத்தில் அண்ணா, கலைஞர் ஊட்டிய குடும்ப பாசத்தின் எடுத்துக்காட்டு இவரே!

அன்பு, அரவணைப்பு, இளையோரையும் சமமாக நடத்திடும் பெருங்குணம் என அண்ணனுக்கு ஈடு மற்றொருவரில்லை. அண்ணாவின் அன்பையும், கலைஞரின் நம்பிக்கையையும், கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் மனதில் தனி இடம் பெற்றவர். கழகத் தோழர்களின் அளவற்ற அன்பயும் ஒருசேர பெற்றவர்.

சிலர் அருகில் இல்லாதபோதும், அவர்களை நினைக்கும்போதே முதலில் அவர்களின் குரல்தான் கேட்கும். அந்த வகையில் அண்ணா, கலைஞர், பேராசிரியர் வரிசையில் இவரும் ஒருவர்.



வெற்றிலை, பாக்கு, புகையிலை நிறைந்த வாயுடன் “என்னங்கையா எப்பிடி இருக்கீங்க,“ என்று பார்த்தவுடன் கேட்கும் குரலில் பாசம், மரியாதை, மகிழ்ச்சி எல்லாம் கலந்து இருக்கும். உடன் சுற்றுப்பயணம் சென்று திரும்பும்போது கிளம்ப நமக்கு மனமே வராது. பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இவர் அறையில்தான் கூட்டம் நிரம்பி வழியும். “I belong to his school of thought,” என்று சொல்லிக் கொள்வதில் பெருமை.

கொள்கைப் பிடிப்பும், தாய்மொழிப் பற்றும், முற்போக்கு சிந்தனையும், பொதுவுடமை சித்தாந்த ஈடுபாடும், அருவியெனப் பேச்சும், கழக உடன்பிறப்புகளிடம் தோழமை உணர்வும், எல்லாவற்றிற்கும் மேல் தலைமையிடம் கொண்ட விசுவாசமும் இவருடைய தனித்தன்மைகள்.

இவரால் இயக்கப் படை வீரர்களாய் உருவானோர் ஏராளம். அந்த தாக்கத்தின் சுவடுகள் இன்னும் உண்டு. அதில் நானும் ஒருவன். வயது 90ஐ கடந்திருக்கலாம். பிரிவென்பதும் இயற்கைதான். ஆனால் அண்ணன் எல் ஜி அவர்களின் மறைவு இந்த இலக்கணங்களுக்குள் அடங்காது.

காலையில் இந்த செய்தி செவியில் விழுந்ததிலிருந்து செயலற்று உட்கார்ந்திருக்கிறேன். ஒரு புத்தகம் எழுதும் அளவு நினைவுகள் அலை அலையாக!

இயக்கத்திற்கு ஒரு படைத் தளபதியின் இழப்பு, கழகத்தலைவருக்கு ஓர் அன்பு அண்ணனின் இழப்பு! எனக்கு குருவை இழந்த தவிப்பு! என் சொல்வேன்? யாருக்கு என்னால் தேறுதல் சொல்ல இயலும்? அன்பின் இருப்பிடம், பொறுமையின் வடிவம், கொள்கைவாதிக்கு கிடைத்த உற்ற துணை என் அண்ணி கமலாவின் முகத்தை எப்படிப் பார்க்க இயலும்? அவர் பெற்ற செல்வங்கள் எல் ஜி அண்ணா, மாதவி, கோயிந்த நாதன், இவர்களோடு அவரின் பிரியாத நிழலாக, இன்னலுற்ற நேரத்திலும் விலகாத உறவாக நிலைத்து நின்ற ஒட்டுநர் ராஜமாணிக்கம் இவர்களுக்கெல்லாம் ஆறுதல் எப்படி சொல்வதென தெரியவில்லை.

உடலால் அவர் இனி இல்லை. ஆனால் உணர்வால், ஊட்டிய பாசத்தால், திராவிட இயக்க கொள்கைப் பற்றால் என்றும் அவர் நம்முடனே இருப்பார்!

**திருச்சி சிவா எம்.பி.**



# நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோவில் வெள்ளித் தேர்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தனர்!



நெல்லை.ஜன.5

திருநெல்வேலி டவுண் நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட வெள்ளித் தேரின் வெள்ளோட்டத்தினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே சேகர்பாபு ஆகியோர் துவக்கி வைத்தனர்.

அப்போது அமைச்சர் பி.கே. சேகர்பாபு கோவில் என்பது அமைதிக்கான இடம் அங்கு மனிதநேயத்தை வளர்க்க வேண்டுமே தவிர மதவெறியை வளர்க்கக் கூடாது என்று நெல்லையில் பேட்டியின் போது கூறினார்.

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் ஒன்றான திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளித்தேர் தீக்கரை யானது.

நெல்லை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாவிடம் பக்தர்கள் வைத்த கோரிக்கையை அடுத்து 2023 ஆம் ஆண்டு அறநிலையத்துறை சட்டமன்றம் மானிய கோரிக்கையின் போது வெள்ளித் தேர் அமைப்பதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேர் செய்யும் பணி தொடங்கியது.இதனை அடுத்து 18 அடி உயரத்தில் மரத்திலான தேர் செய்யப்பட்டு 429.27 கிலோ வெள்ளி தகடுகள் மூலம் ரூபாய் 3.95 கோடி மதிப்பீட்டில் தேர் செய்யப் பட்டது.

அதற்கான புதிதாக அமைக்கப் பட்ட வெள்ளித் தேர் வெள்ளோட்டம் நிகழ்வு திருநெல்வேலி நெல்லையப் பர் காந்திமதி அம்மன் திருக்கோவிலின் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புதிதாக அமைக்கப்பட்ட வெள்ளித் தேரின் வெள்ளோட்டம் நிகழ்ச்சியில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு,இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் இரா.சுகுமார் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், மாநகராட்சி மேயர்.ராமகிருஷ்ணன், ஆணையாளர் மோனிகா ராணா, முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன் கான்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன் மற்றும் திரளான பக்தர்கள் முன்னிலையில் துவக்கி வைத்தனர்.

முன்னதாக ரூபாய் 5.84 கோடி மதிப்பீட்டில் நெல்லையப்பர் கோவில் காந்திமதி அம்பாள் சன்னதிக்கு பின்புறம் அமைந்துள்ள புனரமைப்பு செய்யப்பட்ட கருஉருமாரி தெப்பம், காந்திமதி அம்பாள் சன்னதி மேற்கூரை மற்றும் பொதுமக்கள் வசதிக்காக கோவில் மண்டபங்களில் மின் விளக்குகளை அதிகமாக்கி அழகுபடுத்தும் பணி ஆகியவற்றையும் பேரவை தலைவர் மு.அப்பாவு,அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் துவக்கி வைத்தனர்.

நிகழ்வில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய தலைவர் விஜிலாசத்தியானந்த்,நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ்,துணை மேயர் ராஜ்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன்,நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி,நெல்லை பேட்டை பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம், அறங்காவலர் குழு தலைவர் செல்லையா, மாமன்ற உறுப்பினர் உலகநாதன்,மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன்,தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் காசி மணி,இந்து சமய அறநிலையத் துறை இணை

ஆணையாளர்கள் கவிதா பிரியதர்ஷினி, நகை சரிபார்க்க ஜான்சி ராணி,செயல் அலுவலர் வெங்கடேஸ்வரன் மற்றும் அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.